சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 96/2013

பெயர்: கந்தன் (எ) கந்தசாமி வா.சா.2 தேதி **25.10.2024**

1, 3, 4, மற்றும் 5 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

4 வது பிரதிவாதியின் பெற்றோர்கள் பெயர் சரஸ்வதி, மணிவேல். இரண்டாம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. எனக்கு சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. அதற்கு முன்னரே இரண்டாவது பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது. வழக்கு சொத்தின் சர்வே எண்கள் தெரியாது. தாவா சொத்துக்கள் எக்காலத்தில், யார் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச்சொத்துக்கள் பராமரிப்பட்டது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. 3 வது பெயரில் காண்ட்ராக்ட் எடுக்கப்பட்டது ஆனால் அது எனது மாமனார் பணம். அவ்வாறு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் காண்ட்ராக்ட் எடுக்கப்பட்டது. சந்தையில் பணம் வசூலிப்பது சம்பந்தமாக காண்ட்ராக்ட் எடுக்கப்பட்டது. 3 வது பிரதிவாதி பெயரில் சாராய கடை நடத்தப்பட்டது. 3 வது பிரதிவாதி அரசின் அனுமதியின் பெயரில் தான் சாராய கடை நடத்தினார். எவ்வளவு ஆண்டுகளாக சாராய கடை நடத்தப்பட்டது என்று எனக்குத் தெரியாது. மேற்படி காண்ட்ராக்ட் சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி காண்ட்ராக்ட் சம்பந்தமான விசயங்களை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. (1, 3, 4, மற்றும் 5 வது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(ஒம்/– ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.